Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 327

வியாழக்கிழமை 19 ஒக்ரோபர் 2023

ஐப்பசி 02 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# வடக்கு – கிழக்கில் நாளை ஹர்த்தால்!

## தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணி பரப்புரை நடவடிக்கை தீவிரம்

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 19**

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் நாளையதினம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளும் பரப்புரை நடவடிக்கைகளும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. »11

## ஹர்த்தால் தினமன்று பரீட்சை நடக்குமா?

வலயக்கல்விப் பணிப்பாளர்களிடமே முடிவாம்

யாழ்ப்பாணம், ஒக். 19

நாளை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் அறிவிக்கப்பட்டுள்ளதால், அன்றைய தினம் பாடசாலைகளில் நடைபெறும் »11

## பூநகரியில் நேற்று வெடிபொருள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 19

பூநகரியில் நேற்று ஒரு தொகுதி வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

வெடிபொருள்கள் இருப்பதாக கிளிநொச்சிப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேற்படி »11

இலங்கை - இந்தியா

## கப்பற்சேவையில் தங்கம் கடத்தலா?

இரண்டு மணிநேரம் சோதனை

யாழ்ப்பாணம், ஒக். 19

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான பயணிகள் கப்பற்சேவையில் தங்கம் கடத்தப் »11

## ஹர்த்தாலைக் குழப்புவதற்கு புலனாய்வுப்பிரிவு அச்சுறுத்தல்

செல்வம் எம்.பி. ஆவேசம்

முல்லைத்தீவு, ஒக். 19

ஹர்த்தாலை ஆதரிக்காமல், வணிக நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு சிறு வர்த்தகர்களையும், வணிகர்களையும், சந்தை »11

கொலைக்குற்றச்சாட்டில்

## சிறையில் உள்ளவரின் வீடு தீக்கிரையானது!

கிளிநொச்சி, ஒக். 19

கொலைக்குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபரொருவரின் வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. »11

எல்லைதாண்டும் இந்திய மீனவர்கள்

## பேச்சுக்குச் செல்வதற்காக உண்டியல் மூலம் பணம்!

பருத்தித்துறையில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 19

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களது அத்துமீறலைத் தடுத்து நிறுத்தும் வகையில், »11

## ஹர்த்தாலை குழப்ப காலை வாராதீர்!

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள்ளேயே சதி

சிறீகாந்தா நேற்றுக் கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

ஹர்த்தாலை நீர்த்துப்போகச் செய்வதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள்ளேயே சதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நெருப்பு »11

## பட்டுப்பாதைத் திட்டத்தில் ரணில் – ஜின்பிங் சந்திப்பு

கொழும்பு, ஒக். 19

இந்தியா கடுமையாக எதிர்க்கின்ற, சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்தின் கீழான ஒத்துழைப்பு மாநாட்டில் ஜனாதிபதி ரணில், சீன ஜனாதிபதி ஜின்பிங் இருவரும் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். »11

ஏட்டிக்குப் போட்டி

## கொழும்பு வந்த இந்தியக் கப்பல்

கொழும்பு, ஒக். 19

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான 'ஐ.என்.எஸ். ஐராவத்' போர்க்கப்பல் உத்தியோக »11



## புலிகளைக் காட்டிக்கொடுத்தே பிழைத்தார் பிள்ளையான்

புலனாய்வு அதிகாரி தகவல்

கொழும்பு, ஒக்.19

பிள்ளையான் என்பவரே எமக்குப் புலிகளைப் பற்றிய தகவல்களை வழங்குவார். அதற்காகவே அவரைப் பயன்படுத்தினோம். கோவணத்துடன் இருந்த அவரை வெள்ளை ஆடை அணிவித்து »11

புலிகளிடமிருந்து

## கருணாவை நாம் பிரிக்கவில்லை அவரேதான் தப்பியோடினார்

முன்னாள் புலனாய்வு அதிகாரி தகவல்

கொழும்பு, ஒக்.19

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கருணாவை எவரும் பிரிக்கவில்லை. புலிகள் அமைப்பின் விசாரணைக்குப் பயந்து, உயிருக்குப் பயந்தே அவர் தப்பியோடினார் - இவ்வாறு இலங்கை இராணுவத்தின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான மொனரவில தெரிவித்தார்.

இராணுவத்தின் முன்னாள் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மணலகழ்வு முறியடிப்பு; 3 சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி, ஒக். 19
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணாக மணல் கடத்தலில் ஈடுபட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்த மணல் கடத்தல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முறியடிக்கப்பட்டது.
இதன்போது மணலகழ்வில் ஈடுபட்ட இரண்டு டிப்பர் வாகனம் மற்றும் உழவியந்திரம் என்பன கையகப்படுத்தப்பட்டன. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணையின் பின் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ச-113)

# தேர்தல் முறைமை மாற்றம் வாக்குரிமை மீதான தாக்குதல்

### சஜித் சாடல்



கொழும்பு, ஒக். 19
**தேர்தலை ஒத்திவைத்து மக்களின் வாக்குரிமை மீது தாக்குதல் நடத்துவதற்கு இந்த அரசு முற்படுகின்றது. இது மிகப் பெரியதொரு மனித உரிமை மீறலாகும். எனவே, அரசின் தேர்தல் முறைமை மாற்ற யோசனையை எதிர்க்கின்றோம். கூட்டத்திலும் பங்கேற்கமாட்டோம் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடாளுமன்றத் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பிரதமர் எமக்கு அழைப்பு விடுத்துள்ளார். உள்ளூராட்சிசபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் என்பவற்றில் 'தேர்தல் ஒத்திவைப்பு' அணுகுமுறையையே தற்போதைய அரசு பின்பற்றுகின்றது. இது மக்களின் வாக்குரிமைக்கு விழும் மரண அடியாகும். மக்களின் உரிமை மீறலும் ஆகும்.
எனவே, மக்கள் ஆணைக்கு இடமளிக்கும் வகையில் முதலில் தேர்தலை நடத்திவிட்டு, அதன் பின்னர் தேர்தல் முறைமை மாற்றம் குறித்து பேச்சு நடத்தலாம்.
நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. எனவே, நீங்கள் (பிரதமர்) அழைத்துள்ள கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது. தேவையென்றால் நடக்கவேண்டிய தேர்தல்கள் நடந்துமுடிந்த பின்னர், உத்தேசத் திட்டத்தைச் செயற்படுத்தலாம்.
அதேவேளை, உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நிதி கோரியுள்ளது. அந்தத் தொகை வழங்கப்படுமா எனக் கேட்கின்றேன்' -என்றார். (ஒ-44)

### விவரங்களை அறிவிக்காத

## நிதி நிறுவனங்களுக்கு தண்டம் விதிப்பு

கொழும்பு, ஒக். 19
அடகு பிடித்தல், நிலையான வைப்புத் தொடர்பான விவரங்களை அறிவிக்காத குற்றத்துக்காக இலங்கை மத்திய வங்கி நான்கு நிதி நிறுவனங்களிடம் 17 இலட்சம் ரூபா தண்டப்பணம் அறவிட்டுள்ளது. (ஒ-6)

## தமிழக மீனவர்கள் மீது கடற்கொள்ளையர்கள் தாக்குதல்!

தமிழ்நாடு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கைக் கடற்கொள்ளையர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு உடைமைகள் பறித்துச் செல்லப்பட்டுள்ளதாக தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ள னர். நாகை, கோடியக்கரை அருகே மீன்பித்துக் கொண்டிருந்த நிலையில் இலங்கைக் கடற்கொள்ளையர்களால் தாக்குதலுக்குள்ளான 9 பேர் நேற்றுக் காலை நாகை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்திய மதிப்பில் 5 இலட்சம் ரூபா மதிப்புள்ள மீன்பிடி வலைகள், ஜி.பி.எஸ். கருவிகள், தங்கச் சங்கிலி என்பவற்றையும் பறித்துச் சென்றுள்ளதாகவும், இலங் கைக் கடற்கொள்ளையர்கள் தம்மைக் கடலில் தள்ளி சித்திரவதை செய்ததாகவும் நாகை மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-100)



## சிரட்டைக்கரி சூளைக்கு முல்லையில் அடிக்கல்

முல்லைத்தீவு, ஒக். 19
முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து தெங்கு சார் உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் சிரட்டைக் கரி தயாரிக்கும் சூளை அமைப்பதற்கு நேற்று புதன்கிழமை விசுவமடுப் பகுதியில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் அடிக்கல் நடப்பட்டது.
விசுவமடு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டளை அதிகாரி லெப்டினன்ட் கேணல் சி.சோமபால தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் செயற்றிட்ட மேம்பாட்டுப் பிரிவு பணிப்பாளர் விலாஜ ரமயதாச, செயற்றிட்ட அதிகாரி சந்திரிகா கருணாரத்தின, வடமாகாண நிகழ்ச்சித் திட்ட அதிகாரிரி.எ.அஹமட் புதுக்குடியிருப்புப் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் எம்.சர்மிலி, தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வடமாகாண முகாமையாளர் ரி.வைகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-19)

## இஸ்ரேல் - காஸா போர் விவாதம் நடத்துங்கள்

### எதிர்க்கட்சி கோரிக்கை

இஸ்ரேலும், பலஸ்தீனமும் சமரசப் பேச்சுக்கு முன்வர உலகநாடுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த விவகாரம் தொடர்பில் நாமும் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
பலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசேட அறிக்கையொன்றை விடுத்தே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-
பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையேயான போரில், பயங்கரவாத அமைப்புகளாலும், அரச பயங்கரவாதத்தின் மூலமாகவும் மனிதக்கொலைகள் இடம்பெறுகின்றன.
இந்தப் படுகொலையில் குழந்தைகள், தாய்மார்கள், பெண்கள், பொதுமக்கள் ஆகியோரின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தருணத்தில் மனிதப்படுகொலையை நிறுத்தி சமாதானப் பேச்சுக்கு உலகநாடுகள் முன்வரவேண்டும். நிலையான சமாதானத்தை நோக்கி நகரவேண்டும். பலஸ்தீன மக்களின் உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும். எமது நாட்டு மக்கள்கூட அந்த நாடுகளில் இருப்பதால் இந்த விடயத்தில் அமைதியாக இருக்க முடியாது.
இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதிக்க எதிர்வரும் வெள்ளிக்கிழமை (நாளை) நேரம் ஒதுக்கப்படவேண்டும் - என்றார். (ச-44)

# பலஸ்தீனரின் விடியலுக்கு உலக நாடுகள் ஒன்றுபடுக

### எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 19
பலஸ்தீன தேசத்தினதும் மக்களினதும் விடியலுக்கான தீர்வாக ஐக்கிய நாடுகள் சபை இறுதியாக நிறைவேற்றிய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கும் சர்வதேச சட்டங்கள், சர்வதேச சமவாயங்கள், மனித உரிமை பிரகடனங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் சர்வதேசம் அர்ப்பணிப்புடன் தலையிடவேண்டும். தற்போதேனும் சர்வதேசம் ஒன்றுபடாவிட்டால் மனிதாபினம் தோல்வியட்டதாகவே அர்த்தப்படும்.
இவ்வாறு இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி ஸுஹைர் எம்.எச்.டார் செயிட்டை கடந்த திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடிய போது எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், இஸ்ரேல் பலஸ்தீன மோதலில் சில நாடுகளின் ஒரு தலைபட்சப் போக்குக்கு இடமளிக்க முடியாது. அமைதி, ஒற்றுமையை நிலைநாட்ட உலக தலைவர்கள் முன்வர வேண்டும். பேச்சு மேசைக்கு வந்து சகோதரத்துவத்துடனும், நல்லிணக்கத்துடனும், ஒற்றுமையுடனும் இந்தப் பிரச்சினை யைத் தீர்க்க வேண்டும்.
1948 அரபு - இஸ்ரேல் போர் மற்றும் அதைத் தொடர்ந்த மோதல்களுக்குப் பிறகு அவற்றிலிருந்து இன்று வரை பலஸ்தீன மக்களின் ஜனநாயக உரிமைகள் அங்கீகரிக்கப்படவில்லை.
பலஸ்தீனில் அமைதி, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவம் பேணப்பட்டு அவர்களின் தேசிய உரிமை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும், இது சர்வதேச அளவில் முன்மொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும். சர்வதேசம் தற்போதேனும் ஒன்றுபடாவிட்டால் மனிதாபினம் தோல்வியுற்றதாகவே அர்த்தப்படும் - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சேவை நிறுத்தப்படலாம்!

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்.19**

**ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு வர்த்தகப் பங்காளியைக் கண்டுபிடிக்க முடியவில்லையெனில் விமானசேவையை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

சிங்கள ஊடகமொன்றின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தை சந்திக்கமுடியாது. நிறுவனத்தின் 49 வீதமான பங்குகளை வேறு தரப்பினருக்கு மாற்றி கூட்டு முயற்சியாக நடத்த உத்தேசித்துள்ளோம். நாங்கள் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடனில் இருக்கிறோம் - என்றார். (எ-இ)



# கடையடைப்புக்கு ஆதரவுகோரி களமிறங்கிய கட்சித் தலைவர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 19

வடக்கு - கிழக்கில் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள கதவடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு கோரி தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் ஆதரவாளர்களும் வடக்கின் பிரதான நகரங்களில் பரப்புரைகளில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுத்தமைக்குக் கண்டனம் தெரிவித்தும் மட்டக்களப்பு பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரைகள் அபகரிக்கப்படுவதை கண்டித்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் அழைப்பில் வடக்கு - கிழக்கு முழுவதும் நாளை வெள்ளிக்கிழமை கடையடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பரப்புரை நடவடிக்கையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், வடக்கு மாகாண சந்தை வியாபாரிகள் ஒன்றியத் தலைவர் சி.முகுந்தன் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தின் முக்கியமான வர்த்தக நகரங்களான திருநெல்வேலி, மருதனார்மடம் பகுதிகளில் ஆரம்பித்த கடையடைப்புக்கு ஆதரவு கோரும் பரப்புரை நடவடிக்கை வடக்கு - கிழக்கில் உள்ள முக்கியமான நகரங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-27)

# கஞ்சாப் பொதியுடன் பயணித்தவர் கைது!

கிளிநொச்சி, ஒக். 19

கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் கஞ்சாப் பொதியை மறைத்து எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படை மற்றும் இராணுவத்தினர் இணைந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட சோதனையின்போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 5 கிலோவுக்கு அதிக எடையுள்ள கஞ்சா மீட்கப்பட்டது. கஞ்சாப் பொதியை எடுத்துச் செல்லப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் கையகப்படுத்தப்பட்டது.

சட்டநடவடிக்கைக்காக சந்தேகநபர் சான்றுப்பொருள்களுடன் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒட்டடைக்கப்பட்டுள்ளார் என விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

# அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்க் கட்சிகளே பின்னிற்பு

## வேகமாக நகரவேண்டும் என்கிறார் வியாழேந்திரன்

கொழும்பு, ஒக். 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படுகின்றார். இந்த விடயத்தில் தமிழ் அரசியல் தலைவர்களான நாமே சரியான முறையில் நகர்த்தல்களை மேற்கொள்ளவில்லை என நினைக்கிறேன்.

அந்த நகர்வுகளை நாமே அதிவேகமாக முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க தமிழ் மக்களின் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதில் கூடுதல் ஆர்வம் காட்டி ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பேச்சு நடத்திவருகிறார். எனவே நாமும் அவருடன் கலந்துரையாடி எமது பிரச்சினைகளை விரைந்து தீர்த்துக்கொள்ள முயல வேண்டும் - என்றார். (த-44)



# புதினம் தெரியுமோ?

உண்மை மாட்டு வண்டில்ல போனால் பொய் ரொக்கெட்டில முன்னுக்கே போடுமாம். இப்பவெல்லாம் உண்மையை விட பொய் தான் டக்கெண்டு பரவுது. நேற்றும் இப்பிடி ஒரு செய்தி காட்டுத்தீ மாதிரி இலங்கையையும் தாண்டி இந்தியா மட்டும் பரவினது. இண்டைக்கு விஜய் நடிச்ச லியோ படம் வருகுது. இண்டைக்கு வந்தால் நாலைஞ்சு நாளைக்கு எல்லாத் தியேட்டர்களிலையும் சனம் மொய்க்கும். ஆனால் நாளண்டைக்கு வடக்கு, கிழக்கில ஹர்த்தால். இதால 'ஹர்த்தாலுக்காக உங்கட படத்தை கொஞ்சம் பிந்தி ரிலீஸ் பண்ண ஏலுமோ?' எண்டு 7 தமிழ்க் கட்சியளின்ர தலைவர்மார், விஜய்க்கு ஒரு கடிதம் எழுதிட்டினம் எண்டு நேற்று விடியவே பேஸ்புக் பத்தியெரியத் தொடங்கிட்டுது. அவை எல்லாரும் எழுதிக் கையெழுத்துப் போட்ட கடிதமொண்டும் அதே செய்தியோட பேஸ்புக்கில ஒரு சுத்துச் சுத்திச்சுது. அப்பிடியே காடு, மலை, கடலெல்லாம் தாண்டி இந்தியாவுக்கும் இந்தச் செய்தி போய், அங்கத்தை மீடியாக்களும் இந்தக் கடிதத்தோட 'விஜய் படத்தை வெளியிட வேண்டாமெண்டு இலங்கைத் தமிழ்க்கட்சிகள் கடிதம்' எண்டு செய்தியைப் போடத் தொடங்கிட்டினம்.

அதுக்குப் பிறகுதான் அடிச்சுப் பிடிச்சு விசாரிச்சால், அப்பிடியொரு கடிதத்தை அந்தத் தமிழ்க்கட்சியளின்ர தலைவர்மாரோ வேற ஆருமோ எழுதேலை எண்டது தெரியவந்திச்சுது. அதோட இந்தக் கட்சியளின்ர தலைவர்களும், தொண்டர்களும் ஹர்த்தாலுக்கு ஆதரவு கேட்டு முந்தநாளே வேற மாவட்டங்களுக்குப் போட்டினம். (சில கட்சியளில தொண்டர்மாரை விட தலைவர்மார்தான் கூட எண்டது வேற கதை) அதால அவைக்கு இதைப்பற்றி யோசிக்கவே நேரமில்லாமல் இருக்கேக்க எப்பிடி விஜய்க்கு கடிதம் எழுதியிருப்பினம்?. ஆரோ வேணுமெண்டுதான் இப்பிடியொரு விளையாட்டுக் காட்டியிருக்கினம். கொஞ்சம் ஆழமா விசாரிச்சுப் பார்க்க, அந்தக் கடிதத்தின்ர நதிமூலம், ரிஷிமூலம் எல்லாம் வெளில வந்திட்டுது. உந்தக் கடிதத்தை பேஸ்புக்கில முதல்ல போட்டது ஒரு 'பேக் ஐடி'. அந்த 'பேக் ஐடி'யைப் பார்த்தியள் எண்டால், எல்லாக் கட்சியளையும் கழுவி ஊத்திற மாதிரியோ இல்லாட்டி முன்னணிக்கு சப்போர்ட்டாவோதான் எல்லாப் பதிவும் இருக்கும். அப்பிடிப்பட்ட பேக் ஐடியில போடுப்பட்ட இந்த 'போட்டோ ஷொப்' போலிக் கடிதத்தை கடுமையாக் காவிக்கொண்டு திரிஞ்சதும் அதே முன்னணிக்காரர்தான். ஏன், முன்னணியோ இல்லாட்டி அவையின்ர பேக் ஐடியளோ இப்பிடி ஒரு வேலையைச் செய்யோணும்?

அதுக்கும் காரணம் இருக்கு. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குள்ள இந்தியன் ஆமி செய்த படுகொலை நினைவு நாளில, இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனின்ர கச்சேரி நடக்க இருக்குது. இப்பிடிப்பட்ட ஒரு துன்பமான நாளில அதைச் செய்யாமல் விடச்சொல்லி, சந்தோஷ் நாராயணனுக்கு முன்னணியின்ர ரெண்டு எம்.பி.மாரும் கடிதம் ஒண்டு எழுதி அனுப்பினவை. அவையின்ர கோரிக்கை சரிதான். சனம் கண்ணீரோட படுகொலையை நினவுகூருற நாளில அதைத் திசைதிருப்பிற மாதிரி இந்தக் கச்சேரியை வைக்கக்கூடாது தான். 'ஆனால் அதுக்கு ஆயிரம் வழி இருக்கு. அதைவிட்டிட்டு இன்னும் சின்னப்பிள்ளைத்தனமா, இருக்கிற வேலையெல்லாம் மறந்திட்டு சந்தோஷ் நாராயணனுக்கு கடிதம் எழுத வேண்டிய அவசியமொண்டுமில்லையே' எண்டு பேஸ்புக்கில, முன்னணியை எல்லாரும் வறுத்து எடுக்கத் தொடங்கிட்டாங்கள். அந்த அவமானத்தை மறைக்கத்தான், தங்களைப்போல மற்றத் தமிழ்க் கட்சியள் 'ஹர்த்தாலுக்காக லியோ படத்தைப் போடவேண்டாம்' எண்டு விஜய்க்கு கடிதம் எழுதினதா, முன்னணிக்காரர் ஒரு விளையாட்டுக் காட்டியிருக் கினம். தாங்கள் செய்த பிழையை மறைக்க அடுத்தவனைக் கேவலமாக்கிற உந்தக் குணம் இருக்கிறவை உருப்பட்டதாச் சரித்திரமில்லை கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதயனின் பரிசுக்குவியல்

இந்தியா- பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இன்றைய (19.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ..............................................

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ.இல : ..............................
தொ.இலக்கம் : ..............................

தினம் ஒரு பரிசு 15

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..............................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

மெகா பரிசு

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ.இல : ..............................
தொ.இலக்கம் : ..............................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

'அப்செற்' வெற்றிக்கு முற்றுப்புள்ளி

# ஆப்கானை இலகுவாக தோற்கடித்தது நியூஸி.



புதுடில்லி, ஒக். 19

**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானை மிகமிக இலகுவாகத் தோற்கடித்தது நியூஸிலாந்து அணி.**

உலகக்கிண்ணத் தொடரில் அண்மைய நாள்களாக இடம்பெறும் ஆட்டங்களில் தரப்படுத்தலில் பின்னிலையில் உள்ள அணிகள் பலமான அணிகளைத் தோற்கடித்து அதிர்ச்சிவைத்தியம் கொடுத்துவரும் நிலையில் இந்த வகை வெற்றிகளுக்கு நேற்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார் கொன்வே. வில் ஜோங், ரச்சின் ரவீந்திரா இருவரும் இணைந்து அணியை மீட்டனர். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைக் கடந்தது நியூஸிலாந்து. அணி 109 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரச்சின் ரவீந்திரா. அதே ஓவரில் வில் ஜோங்கை 54 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் ஒமர்ஸை. மிச்செல் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். லாதம், பிலிப்ஸ் இருவரும் நிதானமாக ஆடி நியூஸிலாந்தைப் பலப்படுத்தினார்கள். லாதம் 68 ஓட்டங்களையும், பிலிப்ஸ் 71 ஓட்டங்களையும் பெற்றனர். சாப்மன் இறுதிக்கட்ட அதிரடியைக் கையிலெடுத்து 12 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்றார். முடிவில் 6 இலக்குகளை இழந்;து 288 ஓட்டங்களைப் பெற்றது நியூஸிலாந்து.

பந்துவீச்சில் நவீன் உல் ஹக்:, ஒமர்ஸை இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணிக்கு ஆரம்பமே தடுமாற்றமாய் அமைந்தது. இந்தத் தொடர் முழுவதும் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்திவரும் குர்பராஸ் வெறும் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இப்ராஹிம் சடானும் 14 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட இன்னிங்ஸின் 6 ஆவது ஓவரிலேயே தோல்வியை நோக்கி நடைபோட்டது ஆப்கான். ரஹ்மட் ஷா பெற்ற 36 ஓட்டங்களே ஆப்கானிஸ்தானில் அதிகபட்சம். இறுதி 8 பந்துகளில் 4 விக்கெட்களை இழந்தது ஆப்கானிஸ்தான். முடிவில் 139 ஓட்டங்களில் ஆப்கானிஸ்தான் அனைத்து விக்கெட்களையும் இழக்க 149 ஓட்டங்களால் வென்றது நியூஸிலாந்து.

பந்துவீச்சில் சான்நெர், பேர்குசன் இருவரும் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்கள். (ம)

## இன்றைய ஆட்டம்

இந்தியா பங்களாதேஷ்

இடம் : புனே
நேரம்: பி.ப. 2.00

## தினம் ஒரு பரிசு நாள் 13 இன் வெற்றியாளர்கள்

வி.மிதுர்சா - சாவகச்சேரி

தினம் ஒரு பரிசு 13க்கு ஒருவர் மாத்திரமே சரியான விடை எழுதியுள்ளார்.

# 'ஜெய் ஸ்ரீராம்' முழக்கம் ஐ.சி.சி.யிடம் முறையீடு



இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில், பாகிஸ்தான் வீரர் ரிஸ்வான் ஆட்டமிழந்து செல்லும் போது இந்திய ரசிகர்கள் 'ஜெய் ஸ்ரீராம்' என்று கூச்சலிட்டமைக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட் சபையிடம் முறையிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் பத்திரிகையாளர்கள் மற்றும் ரசிகர்களுக்கு விசா வழங்குவதில் இந்தியா காட்டும் இறுக்கம் தொடர்பிலும் இந்த முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

அறிவுக்கூர்மையை விட நமக்கு அதிகம் தேவை இரக்க உணர்வும் கண்ணியமுமே.

- சார்லி சப்ளின் -


# நினைவாயுதங்களின் வலிமை

இலங்கையின் இறுதிப்போரில் இடம்பெற்ற இனப் படுகொலை தொடர்பான அத்தனை தடயங்களையும் இலங்கை அரசாங்கமும், படைத்தரப்பும் ஒன்றும் விடாமல் அழித்தொழித்துவிட்டன. போரை அறியாத எங்கள் அடுத்த தலைமுறைக்கு 'இங்கு ஓர் இனவழிப்பு யுத்தம் நடந்தது. தமிழினம் கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்டது' என்பதை நினைவூட்டுவதற்கு தாயகத்தில் இரண்டே இரண்டு நினைவுத்தூபிகள் மட்டுமே உள்ளன. ஒன்று இறுதிப்போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் மண்ணில் உள்ள நினைவேந்தல் தூபி, மற்றையது, யாழ்.பல்கலைக்கழகத்துக்குள் உள்ள தூபி. இந்த இரண்டுமே இறுதிப்போர் பற்றிய வலியை எங்கள் எதிர்காலத் தலைமுறையிடம் கையளிக்க நம்மிடம் எஞ்சியுள்ள நினைவாயுதங்கள்.

இந்த நினைவுத்தூபிகளையும் இல்லாமற் செய்வதற்கு பேரினவாதம் மிக நீண்டகாலமாக பலவிதமான முயற்சிகளையும் தொடர்ந்து எடுத்துகொண்டேயிருக்கின்றது. முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த, நினைவுச் சுடரேற்றும் பீடமும் தூபியும் சிலவருடங்களுக்கு முன்னர் மே–18 நினைவேந்தலுக்கு முதல் நாள் 'இனந்தெரியாதவர்களால்' உடைத்து எறியப்பட்டிருந்தன. சுற்றிவர படைத்தரப்பின் கண்காணிப்பின் கீழ் இருந்த அந்தப் பகுதிக்குள் நுழைந்து இத்தகைய இழிசெயலைச் செய்த அந்த 'இனந்தெரியாதவர்கள்' யாரென்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும். உடைக்கப்பட்ட அந்தத் தூபி பின்னர் அவசரகதியில் மீளமைக்கப்பட்டு, நினைவேந்தல் சுடர் ஏற்றப்பட்டு, இன்றளவும் தப்பிப் பிழைத்திருக்கின்றது.

அதேபோன்று, யாழ்.பல்கலைக்கழகத்துக்குள் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியும், அனுமதியில்லாமல் அமைக்கப்பட்டதாகக் கூறி, 2021 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி இரவு திடீரென கனரக வாகனங்களால் இடித்தழிக்கப்பட்டது. ஆனால் அதன் விளைவு, மிக வீரியமாக வெளிப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களும், அரசியல் கட்சிகளும் ஒன்றுதிரண்டு தூபி இடிக்கப்பட்டமைக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர். மாணவர்கள் சிலர் தூபி அமைக்கப்படும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். இந்த எதிர்ப்புக்கு முன்னால் பணிவதைத் தவிர வேறேதும் செய்யமுடியாத நிலை என்பதால், மீண்டும் அங்கே தூபி அமைக்க பச்சைக்கொடி காட்டப்பட்டது. இடிக்கப்பட்ட தூபி – சில வடிவ மாறுதல்களுடன் – மீண்டும் நிறுவப்பட்டது. இனவழிப்பின் நினைவுகளைத் தாங்கி இன்றளவும், அது அமைதியாக இருக்கின்றது. ஆனால் துணைவேந்தருடன் உள்ள தனிப்பட்ட உள்ளக முரண் காரணமாக, பல்கலைக்கழக விரிவுரையாளர் எழுதிய முறைப்பாட்டுக் கடிதத்துக்கு அமைய, மீண்டும் தூபி விடயத்தை அரசதரப்பு கிளற ஆரம்பித்துள்ளது. அதன் முதற்கட்டமாக இன்று 19 ஆம் திகதி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் விசாரிக்கப்பட இருக்கிறார். மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரும், பல்கலைக்கழகம் சார்ந்தோரும் உரிய அனுமதி பெறப்படாமலேயே இந்தத் தூபி கட்டப்பட்டது என்று வாக்குமூலம் வழங்கினால், அதை அடிப்படையாக வைத்து தூபியை அப்புறப்படுத்துவதே அரச தரப்பின் திட்டம். தூபியை அழிக்க நினைத்த அரசாங்கத்துக்கு, முறைப்பாட்டுக்கடிதம் மூலம் வழியேற்படுத்திக் கொடுத்திருக்கிறார் ஒரு கோடரிக்காம்பு விரிவுரையாளர்.

நினைவுகளை அழித்தல் என்பது வரலாற்றை அழித்தல் தான். இன்னொரு வகையில் சொன்னால், இதுவும் ஒருவகையிலான இனவழிப்பே. சிலர் தமது தனிப்பட்ட காரணங்களுக்காக ஒட்டுமொத்த இனத்தின் அடையாளங்களை வேரறுக்க முயல்வது தமிழினத்தின் சாபக்கேடாகத் தொடர்கின்றது. கோடரிக்காம்புகளால் தமிழினம் கருவறுக்கப்படுவது இதுவொன்றும் புதிதுமல்ல. ஒரு போர்வீரனுக்கு அவன் உடலில் இருக்கும் தழும்புகள் தான் அவனின் போர்த்திறமைக்குச் சான்றுகள். அது போன்று உடைப்புகள், தடைகள் மத்தியில் மீளவும் எழுவதுதான்வலி சுமந்த நினைவுத்தூபிகளின் வலிமை. மீண்டுமொரு நினைவாயுதங்களின் வலிமை வெளிப்படும் தருணமிது.




# தொழில்நுட்பம் மூலமாகவே மோசடியை நிறுத்தமுடியும்

## இராஜாங்க அமைச்சர் லசந்த தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.19**

**தகவல் தொழில்நுட்பத்தை உபயோகித்து நிறுவனங்கள் இணைந்த தரவுத் தொகுதியை செயற்படுத்தினால் மட்டுமே அரச நிறுவனங்களின் ஊழல் மோசடிகளை நிறுத்தமுடியும். அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் மூலம் இழக்கப்பட்டுள்ள நிதியை மீண்டும் பெற்றுக்கொள்வது சாத்தியமற்றது.**

- இவ்வாறு கோபா குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கோபா குழுவின் 100ஆவது ஆண்டு நிறைவு தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

100 வருடங்களுக்குப் பின்னர் கோப் குழுவின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகளைப் பலப்படுத்தி காலத்துக்குப் பொருத்தமான பரிந்துரைகளை முன்வைப்பதே தற்போதைய தேவையாக உள்ளது.

அதற்கான சட்டவரைவை ஆளும் கட்சி, சபையில் சமர்ப்பித்துள்ளதுடன் எதிர்க்கட்சிகள் அது தொடர்பில் தமது கருத்துகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தன. இந்தத் தெரிவுக்குழுவைப் பலப்படுத்தி நிலையியற் கட்டளையில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தவேண்டியுள்ளது.

பெரும்பாலான நிறுவனங்களில் அந்த நிறுவனங்களுக்கான நோக்கம் நிறைவேற்றப்படுவதில்லை. வேறு வேறு நோக்கங்களே அங்கு நிறைவேறுகின்றன. பல நிறுவனங்களும் திணைக்களங்களும் அவ்வாறே செயற்படுகின்றன.

நிதி தொடர்பில் நாம் ஆராய்வது போன்று அந்தந்த நிறுவனங்களில் இடம்பெறவேண்டிய செயற்பாடுகள் தொடர்பிலும் நாம் ஆராய வேண்டியுள்ளது. அந்தந்த நிறுவனங்களின் இலக்குகள் அந்தந்த வருடங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராய்வதும் எதிர்காலத்தில் எமது செயற்பாடாகும்.

நாம் அரச நிறுவனங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்கின்றோம். பின்புலங்கள் தொடர்பில் ஆராய்கின்றோம். எனினும் தொழில்நுட்பத்தை பிரயோகிப்பதன் மூலமே நிறுவனங்களின் மோசடிகள், முறைகேடுகளை நிறுத்தமுடியும்.

அதன் ஓர் அம்சமாக நாம் 17 அரச நிறுவனங்களை இணைத்துக் கொண்டு குழு ஒன்றை அமைத்துள்ளோம். நாம் மூன்று மாதத்துக்கு ஒரு முறை அதைக் கூட்டி அந்த 17 நிறுவனங்களினதும் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த நிறுவனங்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்தும் தரவுகளை ஏற்படுத்துவது அவசியம். உதாரணமாக சுங்கத்தில் வந்து இறங்குவதோ ஒரு வாகனம், ஆனால் பதிவு செய்வதோ வேறு ஒரு வாகனம். அவ்வாறு ஆயிரம் வாகனங்கள் தொடர்பில் சிக்கல்கள் எழுந்துள்ளன. அவ்வாறு வாகன மோசடியில் ஈடுபடுபவர்கள் 40 இலட்சம் ரூபா வரி செலுத்த வேண்டிய வாகனத்துக்குப் பத்து இலட்சம் ரூபா வரியை செலுத்தி அதற்கான காரணங்களையும் காட்டுகின்ற நிலையே காணப்படுகிறது. தொழில்நுட்ப உபயோகம் இன்றி இது போன்ற மோசடிகளை நிறுத்த முடியாது - என்றார். (எ-இ)

**நாளை** 20.10.2023 வெள்ளிக்கிழமை ஐப்பசி 03

சுபநேரம் : 06.02 - 07.32
ராகுகாலம் : 10.32 - 12.02
ஷஷ்டி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவிருத்திப் பாடசாலை வாணி விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக். 19

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் வாணி விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் சிவபூமி பாடசாலை மண்டபத்தில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புப் பீடாதிபதி பேராசிரியர் சி.கண்ணதாசன், வலிகாமம் வலய நடன ஆசிரிய ஆலோசகர் திருமதி.ஸ்ரீதேவி கண்ணதாசன், சிறப்பு விருந்தினராக நொத்தாரிஸ் திருமதி அபர்ணா ஜனார்த்தனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-66)

## கூட்டுப் பிரார்த்தனை

குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் அறநெறிக் கருத்துரை, கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வு என்பன கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

நிகழ்வில் குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்கள் கலந்து கொண்டு கூட்டுப் பிரார்த்தனை மற்றும் வழிபாடுகளில் ஈடுபட்டனர். தொடர்ந்து ஆச்சிரமப் பொறுப்பாளர் எஸ்.சிறிதரன் மாணவர்கள் மத்தியில் அறநெறி பற்றிக் கருத்துரையாற்றினார். கருத்துரையிலிருந்து கேள்விகள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்குப் பாராட்டுகளும் வழங்கப்பட்டன. (ச-66)

## ராஜனி திராணகம ஞாபக உரையாடல்

மனித உரிமைச் செயற்பாட்டாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளருமான கலாநிதி ராஜனி திராணகம ஞாபகார்த்த உரையாடல் நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு அருகிலுள்ள சென்.ஜோன் த பப்டிஸ்ட் தேவாலய பரிஷ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் சட்டத்தரணியும், தொழிற்சங்கவாதியுமான சுவஸ்திகா அருலிங்கம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழக இணைப்பாறிய பேராசிரியர். எ.எஸ்.சந்திரபோஸ், களனிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரபா மனுரட்ன, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கலாநிதி.மகேந்திரன் திருவரங்கன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ச-66)

# யாழ்ப்பாணம் வருகைதந்த சொல்வேந்தர் சுகி.சிவம்!

### சிந்தனை உரைநிகழ்வுகளில் பெருமளவானோர் பங்கேற்பு



யாழ்ப்பாணம், ஒக். 19

தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்த சொல்வேந்தர் சுகி.சிவத்தின் சிறப்புச்சிந்தனை உரை நிகழ்வு யாழ்.திருநெல்வேலியிலுள்ள அறிவுத் திருக்கோயிலில் நூற்றுக்கணக்கான மக்கள் பங்கேற்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோயில் தலைவர் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சின்னத்துரை முருகானந்தவேல் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பங்கேற்றார்.

சிறப்புச் சிந்தனை உரையை சொல்வேந்தர் சுகி.சிவம் 'மன சக்தியும் மன அமைதியும்' எனும் தலைப்பில் நகைச்சுவையாகவும் பலரைச் சிந்திக்கத் தூண்டும் வகையிலும் நிகழ்த்தினார்.

அதேவேளை கடந்த சனிக்கிழமை நெல்லியடியிலுள்ள நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் 'மனமது செம்மைப்பட்டால்' எனும் தலைப்பிலும் கடந்த திங்கட்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் 'மனிதனும் தெய்வமாகலாம்' எனும் தலைப்பிலும் சொல்வேந்தர் சுகி. சிவத்தின் சிறப்புச்சிந்தனை உரை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ச)

# குப்பிழான் சிவபூமியில் நவராத்திரி வழிபாடுகள்

குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியுள்ளன. தொடர்ந்தும் ஒன்பது தினங்களும் மேற்படி ஆச்சிரமத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் இடம்பெறும் என்று ஆச்சிரம நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-66)

# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், ஒக். 19

ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் அறிவொளி முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வண். ஸ்ரீவைத்தியலிங்கம் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சமூகசேவைகள் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற அத்தியட்சகர் கே.வி.சிவநேசன் பங்கேற்கவுள்ளார். (ச)

# மனிதவள முகாமைத்துவ கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஒக். 19

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் மனிதவள முகாமைத்துவ உயர்சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறி யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கற்கைநிலையங்களில் இடம்பெறும்.

க.பொ.த. சாதாரண தரத்தில் 6 பாடத்தில் சித்தியடைந்த அனைவரும் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னதாக www.ou.ac.lk எனும் இணையத்தளத்தில் படிவத்தைப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் 021 222 3374 என்ற இலக்கத்துக்கு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள். உடல்நலத்தில் கவனம் தேவை.

**இடபம்:** உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. கல்யாணப் பேச்சு சாதகமாகும்.

**மிதுனம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வெளிவட்டாரத்தில் புதியவர்கள் நண்பர்களாவார்கள்.

**கடகம்:** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள்.

**சிம்மம்:** எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வெளியூர்ப் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள்.

**கன்னி:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவார்கள். அரசு காரியங்கள் நல்லவிதத்தில் முடியும். வீடு மற்றும் வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**துலாம்:** கடந்த இரண்டு நாள்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். உறவினர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள்.

**விருச்சிகம்:** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் எந்த வேலைகளையும் முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். வியாபாரத்தில் வேலையாட்களுடன் போராட வேண்டி வரும்.

**தனுசு:** எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். மருத்துவ செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள்.

**மகரம்:** எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள்.

**கும்பம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கியமான பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள்.

**மீனம்:** கடந்த இரண்டு நாள்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள்.

# நவீன தொழில்நுட்பத்தில் பாடசாலைத் தோட்டம்

### மயிலணி வித்தி வென்றது

கிளிநொச்சி, ஒக். 19

முயற்சியாண்மையுடன் கூடிய பாடசாலைத் தோட்டத்தை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சிறந்த முறையில் மேற்கொண்டமைக்காக சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாலயம் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையை வென்றுள்ளது. வடக்கு மாகாணத்தில் உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் விவசாயத் தோட்டமுயற்சி முன்னெடுக்கப்பட்டது. இதில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பாடசாலைத் தோட்டத்தை நிறுவியமைக்காக சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாலயம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றது. அதனைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மல்லாவி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

நிகழ்வில் கல்வி அமைச்சர், கடற்றொழிலியல் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட பல உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04 . 04 . 1947

மறைவு
29 . 10 . 2022



### அமரர் சிவராமலிங்கம் மகேஸ்வரி

அப்பம்மா என நாம் அழைக்க
வையகத்தில் நீங்களில்லை
நித்தம் உமைத்தேடி - உம்
நினைவில் திழைக்கின்றோம்

பெற்றோருக்கு நற்பிள்ளையாய்
கணவனுக்கு உற்ற துணையாய்
பெற்ற மகனுக்கு பாசமுள்ள தாயாய்
மருமகளுக்கு இன்னொரு அன்னையாய்
பேரப்பிள்ளைகளுக்கு அன்புப் பேர்த்தியாய்
சகோதரர்க்கு என்றும் அரணாய்
ஆலோசனை பல கூறி வழிகாட்டினீர்கள்
இன்று வழிகாட்டியை தவறவிட்டு
வழிநடுவில் தவிக்கின்றோம் அம்மா

முகத்தின் புன்னகையெனும் பொன்னகை தாங்கி
துணிந்து காரியங்கள் ஆர் ''ம் பண்பும்
கம்பீரமான உமது குரலுட
இன்றும் எம் காதில் ஒலிக்கின்றதம்மா
என்றுமே நாம் நல்வழியில் வாழ
வானுறையும் தெய்வமாக இருந்தெம்மை
வழிகாட்டிடுங்கள்.

பிரிவால் துயருறும்
கணவன் : செ. சிவராமலிங்கம்
மகன் : சி. சிவதரன்

192 அரசடிவீதி,
கந்தர்மடம் யாழ்ப்பாணம். (CS 26640) (AK-1)

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 11 . 1951

மறைவு
17 . 10 . 2023



திருமதி
### இரஞ்சிதமலர் பாலச்சந்திரன்

யாழ்ப்பாணம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இரஞ்சிதமலர் பாலச்சந்திரன் அவர்கள் கடந்த (17.10.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிதுரை - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், திரு.திருமதி. கேதீஸ்வரன் தம்பதிகளின் அன்பு மருமகளும், திரு பாலச்சந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பத்மநாதன் அவர்களின் அன்புச் சகோதரியும், சுஜேன், ஷாழினி, ஆர்த்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவமைந்தனின் மாமியாரும், மெல்லினாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 18.10.2023 புதன்கிழமை மாலை 4.00 தொடக்கம் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிவரையும் கல்கிஸை மகிந்த மலர்சாலை முதலாம் மாடியில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னார் இன்று (19.10.2023) வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

தகவல் குடும்பத்தினர்
077 086 7798
(ACO) A-1

# Anniversary Day Celebration

## வீனஸ்விசேட வைத்தியசாலை

### எமது வைத்தியசாலையின் ஆரம்ப நாளை நினைவு கூரும் விழா

எமது வைத்தியசாலையின் சேவையைப்பெற்ற அனைத்து இனிய உள்ளங்களிற்கும், இவ் இனிய நன்னாளில் நன்றி கூறுவதோடு, மேலும் எமது வைத்தியசேவை தொடர ஆக்கமும், ஊக்கமும் தரவேண்டி நிற்கின்றோம்.

**இந்நாளில் :**
- பிரதமவிருந்தினராக : CHIEF GUEST - சிரேஷ்ட மயக்க மருந்தியல் நிபுணர். Dr. ஆர். கணேசமூர்த்தி அவர்கள்
- விசேட விருந்தினராக : SPECIAL GUEST - Dr. கீதா ஹரிப்பிரியா அவர்கள் M.D., DGO., FRCOG (LON)

**கலந்து சிறப்பிக்கிறார்கள்**

- காலை - 7.30 மணியளவில் - பிள்ளையார் பூசை
- காலை - 8.30 மணியளவில் - கொடியேற்ற வைபவம்
- காலை - 8.45 மணிக்கு - மங்கள விளக்கேற்றல்

**அதனை தொடர்ந்து இலவச வைத்திய சேவைகள் ஆரம்பமாகும்**

**காலை 9.00 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு எமது பணியாளர்களின் இரத்ததானம் வழுங்கும் வைபவம் ஆரம்பமாகும்.**

அதனை தொடர்ந்து, இந்தியாவின் புகழ்பெற்ற
**குழந்தையின்மை சிகிச்சை நிபுணர்**
Dr. கீதாஹரிப்பிரியா
[MD, DGO, FRCOG (LON)] அவர்களின் இலவச ஆலோசனை.

இந்தியாவின் புகழ்பெற்ற ஈரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்
Dr. சதீஸ்குமார் - (MBBS, MS, MCH, CONSULTANT)
அவர்களின் ஈரல் வயிறு சம்பந்தமான
இலவச ஆலோசனை.


கால்சம்பந்தமான நோய்களுக்கான நவீன தொழிநுட்ப ஸ்கானிங் (3D SCANNING ) முறை இலவசமாக நடைபெறும்.

**மேற்குறிப்பிட்ட சேவைகள் ( 19.10.2023) இன்று இலவசமாக எமது வைத்தியசாலையில் வழுங்கப்படும்.**
**இச்சேவைகளை அனைவரும் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டி நிற்கிறோம்.**

தொடர்பு: 021 222 4172, 070 613 6136, 077 565 6824
136, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### நாகமுத்து சிவராசா

யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா Sydney ஐ வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து சிவராசா அவர்கள் கடந்த (15.10.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நாகபூரணி சிவராசா (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், சிவானந்தன் (சிவா- லண்டன்), சிவோதயன் (தவம்- ஐக்கிய அமெரிக்கா), சிவபூரணி (மீனா- சிட்னி), சிவநாதன் (நாதன்- ஐக்கிய அமெரிக்கா, இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதரா (லண்டன்), குமுதகுமாரி (ஐக்கிய அமெரிக்கா), காலஞ்சென்ற சிவராசா (சிட்னி), குசலகுமாரி (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், துரைராசா சர்வேஸ்வரன் (முகுந்தன்) அவர்களின் பாசமிகு மாமனாரும், ஜனகன் (லண்டன்), றஜீவ் (ஐக்கிய அமெரிக்கா), தனுஷன் (ஐக்கிய அமெரிக்கா), நிருஷன் (ஐக்கிய அமெரிக்கா), அஸ்வின் (ஐக்கிய அமெரிக்கா), மிதிலா ஜனகன், சிவாந்தினி றஜீவ், காயத்திரி தனுஷன், Anelis நிருஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், Shreya, Siyana, Traveen, Milana, Nirush, Anelis Aria, Lian ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் Thursday, 19 Oct 2023 11:00 AM - 12:30 PM Rookwood Memorial Gardens and Crematorium South Chapel Memorial Ave, Rookwood NSW 2141, Australia இல் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
மருமகன் - சர்வேஸ்வரன் குடும்பம்
மீசாலை.

(CR 00001) A-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 28 • 09 • 1943

இறப்பு 18 • 10 • 2023

### ஜெகநாதன் செட்டியார் மகாதேவா செட்டியார்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகநாதன் செட்டியார் மகாதேவா செட்டியார் நேற்று (18.10.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெகநாதன் செட்டியார் - அன்னப்பா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கவேல் செட்டியார் - இந்துமதி தம்பதியாரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செந்திராசா செட்டியார், சண்முகரத்தினம், பரமரத்திணம் மற்றும் பூமதி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சியாமளாதேவியின் அன்புக் கணவரும், ஜெகப்பிரகாஷ் (ஜெகநாதன் டிரேட் சென்றர்), சர்மிளா (நோர்வே), பிரசாந்தன் (அபிவிருத்தி உத்தியோகர்த்தர், வேலணை பிரதேசசபை), சங்கீதா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகப்பிருந்தா, ரவிச்சந்திரன் (நோர்வே), பாமினி, திலகரட்ணம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெகப்பிரவீன், மகாவைஷ்ணவி, பிரசாந்தி (நோர்வே), நிஷாந் (நோர்வே), அபிலாஷ், ஆரணன், அக்ஷயன், தனுசியன், துஷாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2734, 077 6121 844

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### குமாரசாமி சிவலோகநாதன்

தோற்றம் 11.03.1960

மறைவு 18.10.2023

இலகடி, கோப்பாய் வடக்கு, கோப்பாயை பிறப்பிடமாகவும், பழனியாண்டவர் கோவிலடி, கோண்டாவில் மற்றும் குருந்து வீதி, தையிட்டி தெற்கு, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சிவலோகநாதன் நேற்று (18.10.2023) காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2023) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 1.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26648) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 26 ✽ 02 ✽ 1968

மறைவு 17 ✽ 10 ✽ 2023

### சிறிறஞ்சன் (ரஞ்சன்)

தொண்டமானாறைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிறிறஞ்சன் (ரஞ்சன்) அவர்கள் 17.10.2023 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் பரமேஸ்வரி தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும், தெய்வேந்திர ஐயர் (பிரதம குரு சிறீசெல்வச்சந்நிதி ஆலயம்) காலஞ்சென்ற மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், மகேந்திரராணியின் அன்புக் கணவரும், கபிலன், லோகஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார் (இந்தியா), சந்திரகுமாரி (கனடா), லலிதகுமாரி, வாசுதேவன் (கனடா), சுமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரமணி, ஹறிகரன், பாலச்சந்திரன் (ஓய்வுநிலை ஆசிரியர்), குமுதினி, ரூபசிங்கம் (ஓய்வுநிலை ஆசிரியர்), ஜெயந்திரன், சுசீந்திரன் (சமுர்த்தி உத்தியோகத்தர்), ரவீந்திரன், அமரர் துசியேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.10.2023) வெள்ளிக்கிழமை 596/4, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்த அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 222 5067
077 328 8279

(CS 26644) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகை - காங்கேசன்துறை கப்பல் சேவை நிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஒக். 19
நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையே தொடங்கப்பட்ட பயணிகள் கப்பல் சேவை நாளை வெள்ளிக்கிழமையுடன் நிறுத்தப்பட்டு, இரண்டு மாத இடைவேளைக்குப் பின்னர் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மீண்டும் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் - காங்கேசன்துறை துறைமுகங்களுக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை 40 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த 14ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாள்களில் சேவை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நாளையுடன் குறித்த கப்பல் சேவையை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு பின்னர் வரும் ஆண்டு ஜனவரி மாதத்தில் மீண்டும் தொடங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-100)

## அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் சதொசவில் குறைப்பு

கொழும்பு, ஒக். 19
லங்கா சதொச நிறுவனம் 5 அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை இன்றுமுதல் குறைப்பதற்குத்தீர்மானித்துள்ளது.
அதன்படி, இறக்குமதி செய்யப்படும் ரின் மீன்களின் (425 கிராம்) விலை 35 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 650 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
உள்ளூர் ரின் மீன்களின் (425 கிராம்) விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 545 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
ஒரு கிலோ பாசிப்பயறின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக ஆயிரத்து 100 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
ஒரு கிலோ நெத்தலியின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக ஆயிரத்து 90 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
ஒரு கிலோ கொத்தமல்லி 10 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 540 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம)

## நினைவுப் பேருரை

யாழ்., ஒக். 19
யாழ்ப்பாணம் மாவட்ட குருக்கள் ஒன்றியம் நடத்தும், ஆயர் தியோகுப்பிள்ளை நினைவுப் பேருரை நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.
பாதுகாவலன் மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் 'பின்காலனிய இலங்கையில் சமயங்களின் அரசியல்' என்ற தொனிப்பொருளில் நினைவுப் பேருரையை கலாநிதி தி.செல்வமனோகரன் ஆற்றவுள்ளார். (ம)


**வேலை ஆட்கள் தேவை**

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
மேலும் சிட்டை எழுதுனர் இருபாலாரும் விரும்பத்தக்கது.
தொடர்பு:
**0777 488 093**

**வேலைவாய்ப்பு**

**கல்வி சாரா ஊழியர்கள்**
உடுவில் மகளிர் கல்லூரியில் பின்வரும் வேலைவாய்ப்புகளுக்கு வெற்றிடம் இருப்பதால் 55 வயதிற்குட்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கலாம்.
1. பாடசாலை விடுதி மேற்பார்வையாளர் - முழுநேரம்
2. சமையல் மேற்பார்வையாளர் - முழுநேரம்

இடம் : உடுவில் மகளிர் கல்லூரி
காலம் : 23.10.2023 - 25.10.2023
நேரம் : காலை 8.30 - மதியம் 1.00

அதிபர்
(CS 40792) (AK1)

**ஆண் உதவியாளர்கள் எங்கள் பலசரக்கு கடைக்கு தேவை**
மாதத்திற்கு 30,000 - 35,000 சம்பளம் வழங்கப்படும் (உணவும் தங்குமிடமும் வழங்கப்படும்).
**S.A.W & Sons, Hambantota**
**077 480 3379**


**கண்ணீர் அஞ்சலி**



தோற்றம் 28.02.1942 மறைவு 18.10.2023

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக கடமையாற்றும்
**திருமதி மு.ஜெயக்குமாரி**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி முத்துக்குமாரு தங்கேஸ்வரி**
அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
**விரிவுரையாளர் கழகம்**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை.**
(CS 26646)A-1


**சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
பதிவு திகதி - 11.03.1972 பதிவு இல - J/1594

**பதவி வெற்றிடம்**

திருத்தம் 18.10.2023 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் ஆறாம் பக்கத்தில் வெளிவந்த விளம்பரத்தில் பின்வருமாறு திருத்தி வாசிக்கவும்

தகைமைகள்
அ. கூட்டுறவு ஊழியர் 13வது சம்பளத்திட்டப் பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர் / கொள்வனவு உத்தியோகத்தர்/கிளை மேற்பார்வையாளர் / கிளை முகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

ப.தெ.வ.அபி.கூட். சங்கம்
டச்சு வீதி, சாவகச்சேரி.

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
[illegible]
19.10.2023


**ஓராண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 14 . 11 . 1942
மறைவு 29 . 10 . 2022

அமரர் திருமதி
**குமாரசாமி விமலாதேவி**

அம்மா... அம்மா .... அம்மா.....
காலம் தந்த கடவுள் நீ
கை கூப்பி வணங்கும் தெய்வம் நீ

உயிருக்குள் அடை காத்து உதிரத்தை
- உணவாக்கி பாசத்தில்
தாலாட்டி இன்பம் துன்பம் எதுவாகினும்
நமக்காக வாழ்ந்த தெய்வம் எங்கள் அம்மா
தன்னலமற்ற உன்னத உறவு எங்கள் அம்மா
உலகில் தேடித்தேடி எங்கு அலைந்தும்
- மீண்டும் கிடைக்காது
அம்மா என்கின்ற அன்பு உறவு

அன்பினால், பண்பினால், நட்பினால்,
- ஆளுமையால் அனைவரது
இதயங்களில் குடியிருக்கும் எம்
- அன்னையை நாம் என்றென்றும்
நினைத்து இருப்போம்.

ஆயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
- இன்முகம் மறைவதில்லை
ஆயிரம் யுகங்கள் ஓடி
ஒழிந்தாலும் உன் நினைவுகள் எல்லாம்
எம் இதயத்தில் வாழும்.

உங்கள் நினைவுடன் : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**மரண அறிவித்தல்**



மலர்வு 28 . 02 . 1942
உதிர்வு 18 . 10 . 2023

**திருமதி முத்துக்குமாரு தங்கேஸ்வரி**

கல்வியங்காடு செங்குந்தாவை பிறப்பிடமாகவும் புலோலி கிழக்கு கணையன் தோட்டம் பருத்தித்துறையை நிரந்தர வசிப்பிடமாகவும் கைதடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு தங்கேஸ்வரி அவர்கள் நேற்று (18.10.2023) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையாக்குருக்கள் தங்கரத்தினம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் ஜெயக்குமாரி (விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), காலஞ்சென்ற மாலினி மற்றும் சாந்தினி (முகாமையாளர்), யோகேஸ்வரி, குமுதினி (கணக்குப்பதிவாளர் - C.T.B), Dr.ராஜினி (சித்த வைத்திய பட்ட மேற்படிப்பு -இந்தியா), காலஞ்சென்ற சுந்தர்ராஜ் ஆகியோரின் பாசமிகு அன்னையும், புஸ்பவதி (லண்டன்), ஸ்ரீஸ்கந்தராஜா, காலஞ்சென்றவர்களான சுபாச்சந்திரன், தயாபரன் மற்றும் தியாகராஜா, கணேசன், Dr.ஸ்ரீகஜன் (சித்த போதனா வைத்தியசாலை- கைதடி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், Dr.கோபிக்கிருஷ்ணா (லண்டன்), சுவர்ணராஜ், சஞ்சிதகிருஷ்ணா (பேராதனை பல்கலைக்கழகம்), துர்க்கா (லண்டன்), கபிலேசன் (சுவிஸ்), சஸ்மியா (ஜேர்மனி), பிரணவன், கபிஷேகா (பிரான்ஸ்), சுந்தர்ராஜ் (ஜேர்மனி), கொலுசனன், ஆத்மிகா, அபிஷன், ஆர்த்தியா, அவிநீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, தங்கம்மா, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கைதடியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்பு: 077 222 4913
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வேலணைப் பிரதேசசபையின் முன்பள்ளியில் சிறுவர்தின மற்றும் ஆசிரியர்தின நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன. (ச)

# மின்கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிக்க வேண்டிய கட்டாயம்

## மின்சாரசபை தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.19

**எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு மின்சாரக் கட்டணத்தை 10 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது என்று இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.**

இந்த ஆண்டின், ஒக்ரோபர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் மின்சாரசபையின் உத்தேச வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையிலான இடைவெளியை நிர்வகிப்பதற்கு மின்கட்டணங்களை அதிகரிக்க வேண்டியது அவசியமானது என இலங்கை மின்சாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

மின்சாரக் கட்டணத்தை 22 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சாரசபை சமர்ப்பித்த தரவுகளில் முரண்பாடுகள் காணப்படுவதால், மின்கட்டணத்தை மீளமதிப்பிட வேண்டும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அண்மையில் இலங்கை மின்சாரசபைக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தது.

இலங்கை மின்சாரசபையின் பொது முகாமையாளர் இதற்கான பதில் கடிதத்தை அனுப்பியுள்ளார். கடந்த செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதிவரை, இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் மற்றும் உள்ளூர் தனியார் மின் உற்பத்தியாளர்களுக்குச் செலுத்துவதற்காக அரச வங்கியொன்றிலிருந்து 32சதவீத வட்டி விகிதத்தில் பெறப்பட்ட மேலதிகப்பற்றுக்காக ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 51 மில்லியன் ரூபாவை செலுத்தவேண்டியுள்ளது என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி வரை, வெளித்தரப்பினருக்குச் செலுத்தவேண்டிய கடன் மற்றும் அசல் கொடுப்பனவுகளின் தொகை 4 இலட்சத்து 21 ஆயிரத்து 818 மில்லியன் ரூபாவாகும் என மின்சாரசபையால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ-இ)

# டெங்குப் பரவலைத் தடுக்க விதிகளைக் கடைப்பிடிக்குக

## தென்மராட்சியில் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 19

மழைகாலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் தென்மராட்சிப் பிரதேச குடியிருப்பாளர்கள் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

தமது குடியிருப்புகளில் நீரேந்துப் பொருள்கள் காணப்படின் அவற்றை அகற்றி துப்புரவாக வைத்திருப்பதுடன் உரப்பைகளில் கழிவுகளைக் கட்டிவைத்து கழிவகற்றல் மூகாமைத்துவத்தை சரிவர மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் காய்ச்சல், வயிற்றோட்டம் ஏற்படின் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனைகள் மேற்கொண்டு, சிகிச்சை பெற்று ஏனையோருக்கு பரவாது தடுக்கவேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (ச-9)

# விவசாயத்தை நோக்கி நகரவேண்டும் இலங்கை

## உலக உணவுத் திட்டம் அறிவுறுத்தல்

கொழும்பு, ஒக்.19

உணவுப் பாதுகாப்புக்காக இலங்கை உடனடியாக நிலையான விவசாயத்தை நோக்கி இடம்பெயரவேண்டும் என ஐக்கிய நாடுகள்சபையின் உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது.

உலக உணவு தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து அந்த அமைப்பின் பிரதிநிதிகள் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையில் நீர் வளங்களுக்கான அபாய நிலை தொடர்ந்தும் அதிகமாகவே காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் நன்னீர் வளங்கள் மற்றும் அவற்றின் நிலைத் தன்மையைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டிலுள்ள மொத்த நன்னீரில் 82 சதவீத மானவை நெல் விவசாயத்துக்கு மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது என்று உலக உணவுத் திட்டத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஏ-இ)



# பலாலி விமானநிலையம் 4 ஆண்டுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஒக. 19

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம் மீளத் திறக்கப்பட்டு நான்காவது வருட பூர்த்தியை முன்னிட்டு சர்வதேச விமான நிலைய வளாகத்தில் விசேட நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

2019ஆம் ஆண்டு நல்லாட்சிக் காலத்தில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டது. 2020ஆம் ஆண்டு கொரோனாக் காலப்பகுதியில் மூடப்பட்ட விமான நிலையம் மீண்டும் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் மீள இயங்க ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-20-26)

# கொடிகாமம், மட்டுவிலில் மரக்கன்றுகள் நடுகை

யாழ்ப்பாணம், ஒக். 19

இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையினரால் செயற்படுத்தப்படும் 'விஜயனின் ஒரு கோடி தாவரங்கள்' நடுகைத் திட்டத்தின் கீழ் கொடிகாமம் மற்றும் மட்டுவில் பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மரக்கன்றுகள் நடப்பட்டன.

கொடிகாமம் ஐயனார் ஆலயச் சூழலில் 25 தேக்கங்கன்றுகளும் மட்டுவில் வடக்கு ஊரிப்பிட்டி இந்துமயானச் சூழலில் 60 சவுக்கு மரக்கன்றுகளும் நடப்பட்டன. (ச-66)

# குடிமனைக்குள் பன்றி வளர்ப்பு

## பொன்னகர் மக்கள் துர்நாற்றத்தால் அவதி

கிளிநொச்சி, ஒக். 19

பொன்னகர் மத்தி கிராம குடியிருப்பினுள் பன்றி வளர்ப்பு மேற்கொள்ளப்படுவதால் துர்நாற்றம் ஏற்பட்டு சுகாதாரச் சீர்கேடு உருவாகியுள்ளது என்று கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில்,

மக்கள் குடியிருப்புப் பகுதியினுள் பன்றி வளர்ப்பு இடம்பெறுகிறது. தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் பன்றிகளின் கழிவுகள் நீரில் கலந்து துர்நாற்றம் அதிகமாகியுள்ளது. இதனால் அருகிலுள்ள வீடுகளில் சமைத்துச் சாப்பிட முடியாத நிலை உருவாகியுள்ளது. சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி வளர்ப்பில் ஈடுபடுமாறு பன்றி வளர்ப்பாளர்களிடம் பல தடவைகள் எடுத்துக் கூறியும் அவர்கள் கவனத்திற்கொள்ளவில்லை. எனவே உரிய அதிகாரிகள் இதுகுறித்து கவனம் செலுத்தி இந்தச் சுகாதாரச் சீர்கேட்டைத் தடுக்கவேண்டும் - என்றனர்.

இது தொடர்பில் கரைச்சிப் பிரதேச பொறுப்பு மருத்துவ அதிகாரி மற்றும் கரைச்சிப் பிரதேசசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியோரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, பொதுமக்களின் முறைப்பாட்டுக்கமைய நேரில் சென்று களநிலைமைகளைப் பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்- என்றனர். (ச-214)


# குடிசன வீட்டு வசதிகள் வவுனியாவில் மதிப்பீடு

வவுனியா, ஒக். 19

குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பீட்டின் இரண்டாம் கட்டமான கட்டடங்களை நிரல்படுத்தும் செயற்றிட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாட்டில் மாவட்டச் செயலாளரின் வழிகாட்டலில் நிரல்படுத்தும் உத்தியோகத்தர்களாக கிராமஅலுவலர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு, ஒவ்வொரு கட்டடங்கள் மற்றும் வீடுகளுக்குச் சென்று அங்கு வசிப்போரின் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.



அதற்கமைவாக வவுனியா பிரதேசசெயலக பிரிவுக் குட்பட்ட வைரவப்புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் இந்தச் செயற்பாடு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. (ச-18-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியாகக் கடமையாற்றிய ரி.சரவண ராஜாவுக்கு விடுக்கப்பட்ட உயிரச்சுறுத்தல் மற்றும் தீர்ப்பை மாற்றியெழுதுமாறு வழங்கப்பட்ட அழுத்தம் என்பன காரணமாக அவர் பதவிகளைத் துறந்துவிட்டு நாட்டைவிட்டு வெளியேறினார். நீதித்துறையின் சுயாதீனத்தன்மைக்கு எதிரான இந்த அச்சுறுத்தல்களுக்கு எதிராகத் தமிழர் தாயகத்திலும் நாடளாவிய ரீதியிலும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக வடக்கு - கிழக்கில் நாளை ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த நிலையிலேயே ஹர்த்தாலை முழுவெற்றி பெறச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்றையதினம் செய்தியாளர் சந்திப்பொன்றையும் நடத்தின. இதில் கலந்துகொண்ட தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்ததாவது:-

நீதித்துறையின் சுயாதீனம் இன்று கேள்விக்குட்பட்டிருக்கின்றது. தமிழர்களுக்கு நீதித்துறையால் கிட்டிய நீதிகூட இன்று மறுக்கப்பட்டிருக்கின்றது. தமிழர் தாயகத்திலும் நாட்டின் பல பகுதிகளிலும் நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்க வலியுறுத்தி தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சட்டத்தரணிகள் பிறிதொரு முனையில் போராடிக்கொண்டிருக்கின்றனர். இந்தப் போராட்டங்களின் தொடர்ச்சிகளாக வடக்கு-கிழக்கு மக்களின் கோரிக்கைக்கு இணங்க நாங்கள் எதிர்வரும் 20ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் ஹர்த்தால் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

போராட்டத்தை கிழக்கு மாகாணத்திலும் இதர பகுதிகளிலும் ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழர் தாயகத்தில் உள்ள அனைத்து மக்களும், பொது அமைப்புகளும் இந்தக் ஹர்த்தால் போராட்டம் வெற்றிபெறுவதற்குத் தேவையான அத்தனை ஒத்துழைப்புகளையும் வழங்கவேண்டும் - என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன், புளொட் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-ம-27-66-125)

## கப்பற்சேவையில்...

படுவதாக வெளியான தகவலையடுத்து, கப்பலின் பயணம் இடைநிறுத்தப்பட்டு சுமார் இரண்டு மணிநேரம் தீவிர சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் கப்பற் சேவையானது கடந்த 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இன்று இலங்கையில் இருந்து முற்பகல் 11 மணியளவில் இந்தக் கப்பல் பயணிப்பதாகவிருந்தது. இந்த நிலையிலேயே கப்பலில் தங்கம் கடத்தப்படுவதாகப் பகிரப்பட்ட தகவலையடுத்து கப்பலின் பயணம் பிற்போடப்பட்டுதீவிரசோதனைகள்முன்னெடுக்கப்பட்டன. சுமார் 2 மணிநேரச் சோதனையின் பின்னர் தங்கம் எதுவும் மீட்கப்படாததையடுத்து கப்பல் பயணத்தைத் தொடர்ந்தது. (அ-ம-27)

## பூநகரியில்...

வெடிபொருள்கள் (மோட்டார் குண்டுகள்) அடையாளப்படுத்தப்பட்டு, நீதிமன்றின் அனுமதியுடன் அவை மீட்கப்பட்டன. (அ-ம-27)

## சிறையில்...

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கிளிநொச்சி, கல்லாறு பகுதியிலிருந்து எழுதுமட்டுவாழ் பகுதிக்கு வேலைக்காக சென்ற 28 வயதுடைய நபரொருவர், சிலர் இணைந்து நடத்திய கூட்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். தாக்குதலுக்கு உள்ளானவர் பொலிஸாரால் மீட்கப்பட்ட பின்னர் உயிரிழந்திருந்தார். இது தொடர்பில் நால்வரைச் சந்தேகநபர்களாக பொலிஸார் கைதுசெய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களில் ஒருவரின் வீடே தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-20)

## பேச்சுக்குச்...

இந்தியாவில் இடம்பெறவுள்ள பேச்சுக்குச் செல்வதற்காக உண்டியல் குலுக்கி நிதி சேகரிக்கும் நடவடிக்கை பருத்தித்துறையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ள மீனவர்கள் தெரிவித்ததாவது:-

'இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகளில் எல்லை தாண்டி, சட்டவிரோதமாக எமது கடற்பரப்புக்குள் நுழைந்து தொழில் செய்வதை தடுப்பதற்காக இந்தியா சென்று தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி முதலமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், கடற்றொழில் வளம் சம்பந்தப்பட்ட பிரமுகர்கள், கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்த வடக்கு கடற்றொழில் சம்மேளனமும் சமாசங்களும் தீர்மானித்துள்ளன. அதற்கான பயணச் செலவுக்காகவே இந்த நிதி சேகரிக்கப்படுகின்றது - என்றனர்.

மேற்படி பேச்சுக்களுக்காக படகுகளில் இந்தியாவுக்குச் செல்வதற்கு அனுமதிக் காவிட்டால் உண்டியல் குலுக்கிப் பணம் சேகரித்து பேச்சுக்காகச் செல்வோம் என மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் முன்னதாக எச்சரித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## கொழும்பு...

பூர்வ பயணத்தை மேற்கொண்டு கொழும்புத் துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது.

இந்தப் போர்க்கப்பல் இலங்கையில் நங்கூரமிடப்பட்டிருக்கும் காலப்பகுதியில் கூட்டுப்பயிற்சியிலும் ஈடுபடவுள்ளது. பயிற்சிகள் நிறைவடைந்த பின்னர் நாளை வெள்ளிக்கிழமை கப்பல் மீண்டும் இந்தியா நோக்கிப் பயணமாகவுள்ளது. சீனக்கப்பலின் வருகையை யொட்டி, இலங்கையை மையமாக வைத்து சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில் ஏட்டிக்குப் போட்டியாக இந்தியக் கப்பல் கொழும்புக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## கருணாவை...

புலனாய்வு அதிகாரியான மொனரவில தமிழ் மொழியிலும் தேர்ச்சி பெற்றுள்ளார். இதனால் வடக்கு - கிழக்கை மையப்படுத்தியே அவரின் புலனாய்வுச்சேவை இடம்பெற்றுள்ளது. வவுனியாவில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த முகாம்களிலும் பணியாற்றியுள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சுமித்' என்பவரைத் தெரியுமா என கருணாவிடம் கேளுங்கள், அந்த 'சுமித்' நான்தான். கருணாவை எவரும் பிரித்தெடுக்கவில்லை, புலிகளின் பணத்தை அவர் கொள்ளையடித்தார். அந்தச் சம்பவம் தொடர்பில் புலிகளால் கருணா வன்னிக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். மரண பயத்தால் அவர் அங்கு செல்லவில்லை.

அதையடுத்து கருணாவைக் கொலை செய்வதற்கு வன்னியில் இருந்து பொட்டு அம்மானால் குழுவொன்று அனுப்பப்பட்டது. ராஜீவ்காந்தி கொலையுடன் தொடர்புபட்ட சந்தேகநபராகப் பெயரிடப்பட்ட -இந்தியாவில் இருந்து தப்பிவந்த - ஒரேயொரு புலி உறுப்பினர் தலைமையில்தான் அந்தக் குழு அனுப்பப்பட்டிருந்தது. இது கருணாவுக்கும் தெரியவந்தது. இறுதியில் 20 பேரை கொலை செய்துவிட்டு கருணா தப்பியோடினார் - என்றார். (அ-எ-44)

## புலிகளைக்...

அழகுபடுத்தியது புலனாய்வுப் பிரிவில் உள்ள குழுதான் - இவ்வாறு இலங்கை இராணுவத்தின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான மொனரவில தெரிவித்தார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலனாய்வுப்பிரிவில் ஒருசிறிய தனிக்குழுவொன்று உள்ளது, அந்தக் குழுதான் 'திரிப்போலி' என்ற கொலைக்கும்பல். 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரே அது உருவாக்கப்பட்டது. அரசியல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகவே இந்தக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவே பிள்ளையானுக்கு வெள்ளை ஆடை அணிவித்து அழகுபடுத்தியது - என்றார்.

நீங்கள் எப்படி புலனாய்வு அதிகாரி என்பதை நம்புவது என எழுப்பப்பட்ட கேள்விக்கு, சான்றிதழ்கள் மற்றும் புகைப்படங்களை அவர் அந்த ஊடகத்துக்கு காண்பித்தார். (அ-எ-44)

## ஹர்த்தாலை...

டன் விளையாடவேண்டாம் என்று அத்தகையவர்களுக்குக் கூறிக்கொள்கின்றேன் - என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற ஹர்த்தால் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஹர்த்தால் தொடர்பில் காலைவாரமுயற்சிக்கவேண்டாம் என தமிழ் தேசியப் பரப்பில் இயங்குகின்ற சிலருக்குக் கூறிவைக்க விரும்புகின்றேன். கட்சிப் பிரச்சினைகளை கட்சிக்குள் வைத்துக் கொள்ளுங்கள். அவற்றைத் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான செயற்பாடுகளாக மாற்றாதீர்கள். இத்தகையவர்கள் தங்கள் நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும் அல்லது அவை நிறுத்தி வைக்கப்படும். நெருப்போடு விளையாட முயற்சிக்கக்கூடாது. உங்களுக்குக் கிடைத்த பதவிகள் தமிழ்த் தேசியத்தால் கிடைத்த பதவிகள். அவற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தமிழ்த் தேசியத்தின் காலைவாருவதற்கு அவர்கள் முயற்சிப்பதை அனுமதிக்கமுடியாது - என்றார். (அ-ம-26)

## ஹர்த்தாலைக்...

வியாபாரிகளையும் இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஹர்த்தால் தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

20ஆம் திகதி ஹர்த்தாலைக் கடைப்பிடிக்குமாறு கோருகின்றோம். எங்களுடைய மக்கள் போராட்டத்தின் ஊடாக முன்னுக்கு வந்தவர்கள். போராட்டத்தின் குணாதிசயங்களைக் கொண்டவர்கள். எனவே இந்தப் போராட்டத்தையும் அதன் தாற்பரியத்தையும் மக்கள் அறிவார்கள். இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு தருவார்கள். எனினும் ஹர்த்தாலைப் புறக்கணித்து வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வணிகர்களையும் சந்தை வியாபாரிகளையும் இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றனர். ஆனால், இந்த அச்சுறுத்தல்களைப் பொருட்படுத்தாமல் மக்கள் தற்துணிவுடன் இந்த ஹர்த்தாலை ஆதரிக்கவேண்டும் - என்றார். (அ-ம-18)

## ஹர்த்தால்...

பரீட்சைகள் தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர்களே தீர்மானங்களை மேற்கொள்வர் என வடமாகாண பதில் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பரீட்சைகள் விடயம் முழுவதும் அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களின் தலைமையிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் ஹர்த்தாலால் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பில் ஆராய்ந்து அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களே பொருத்தமான முடிவை மேற்கொள்வார்கள் - என்றார். (அ-ம-125)

## பட்டுப்பாதைத்...

பட்டுப்பாதைத் திட்டத்தின் மூன்றாவது சர்வதேச ஒத்துழைப்பு மாநாடு சீனாவின் தலைநகர் பீஜிங்கில் உள்ள மக்கள் மண்டபத்தில் சீன ஜனாதிபதியின் தலைமையில் 20 நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் சுமார் 20 நாடுகளின் 130 பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது. இதன்போதே ஜின்பிங் மற்றும் ரணில் இருவரும் சந்தித்துக் கலந்துரையாடினர். (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெள்ளைவான் கலாசாரத்தை ஏற்படுத்தியது புலனாய்வுப் பிரிவு

## முன்னாள் புலனாய்வு அதிகாரி தகவல்

கொழும்பு, ஒக்.19

வெள்ளைவான் கலாசாரத்தை அறிமுகப் படுத்தியது நாம்தான். அதாவது புலனாய் வுப் பிரிவுதான் என்று தெரிவித்தார் முன் னாள் புலனாய்வு அதிகாரியான மொனர விலை.

சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- புலி உறுப்பினர்களைக் கைது செய்து மாட்டு வண்டியில் அழைத்துச் செல்ல முடியாது அல்லவா? அதற்காகவே வெள்ளைவான் பயன்படுத்தப்பட்டது. இதுகூட ஒரு வகையான புலனாய்வு நட வடிக்கைதான். புலிகளைக் கடத்துவதற் காக அல்ல, கைது செய்வதற்காகவே பயன்படுத்தப்பட்டது.

வடக்கு - கிழக்கு மக்களுக்கு நன்றிகூறு கின்றேன், ஏனெனில் போரை முடிவுக்குக் கொண்டுவர 70 வீத பங்களிப்பை அவர் கள்தான் வழங்கினார்கள். இதற்காக அம்மக்களுக்கு இதுவரை எவரும் நன்றி கூறியதில்லை. இன்றளவிலும் தகவல் வழங்குநர்களாக அவர்கள் எம்முடன் செயற்படுகின்றனர் - என்றார். (எ-44)

அமெரிக்க லொத்தர் விசா
2025ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன
* 5000இற்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்படுவர்
* அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. T.P: 0777 55 45 28

விற்பனைக்கு
Food City Track மற்றும் தளபாடங்கள் Clothes Hangers, Deep freezer போன்றவை விற்பனைக்கு உண்டு.
யாழ்ப்பாணம் இலுப்பையடி சந்தி, பலாலி வீதி.

15 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
V2 Travels
0768226244
0768226241

## யாழ்.பேருந்துநிலையத்தில்

# காவாலித்தனம் செய்த மேலும் ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலை யத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்து, அவர்கள் மத்தியில் அச் சத்தை ஏற்படுத்தும் விதமாக பிறந்த நாள் கொண்டாடிய கும்பலை சேர்ந்த மேலும் ஐவர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலை யத்துக்கு 50க்கும் மேற்பட்ட மோட் டார் சைக்கிளில் வந்த 150க்கும் மேற் பட்ட இளைஞர்கள் அண்மையில் ஒன்றுகூடி தங்களில் ஒருவரின் பிறந்த நாளை கேக் வெட்டி கொண்டாடியுள் ளனர். அதனை சமூக வலைத்தளங்க ளில் பகிர்ந்தும் உள்ளனர்.

பிறந்தநாள் கொண்டாடியவர்களின் செயற்பாடானது வீதியில் சென்ற மற் றும் பேருந்து நிலையத்தில் இருந்தவர் கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாக இருந்ததாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படை யில் மேற்படி கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். அவர்களில் ஐவரே நேற் றுக் கைதுசெய்யப்பட்டனர். முன்ன தாக இருவர் கைதுசெய்யப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-27-20)

# எமக்கான போராட்டத்துக்கு என்றும் எங்களின் ஆதரவு!

## வடக்கு தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு வழங் கப்படும் என்று வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் தெரிவித் துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை யில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையின் நீதித்துறையில் இருந்து தமிழர்களுக்கு நீதிகிட்டாது என்பதை வெளிப்படுத்தக் கோரியும், நீதிபதிகள் அச்சுறுத்தப்பட்டு இந்த நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய சூழல் ஏற்படுத்தப்பட்டதைக் கண்டித் தும், வடக்கு - கிழக்கில் விகாரை களை அமைப்பதற்காக மேற்கொள் ளப்படும் காணி ஆக்கிரமிப்பைக் கண்டித்தும், கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் மேய்ச்சல் தரைகள் பறிக்கப்பட்டு அங்கு சிங்களக் குடி யேற்றங்கள் மேற்கொள் ளப்படுவதை எதிர்த்தும் இந்தக் ஹர்த் தாலுக்கு வட மாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் தன் முழுமையான ஆதர வைத் தெரிவிக்கின்றது - என்றுள் ளது. (அ-ம)

# இ.போ.ச. பேருந்து - டிப்பர் நேரெதிரே மோதி விபத்து

## தெய்வாதீனமாகப் பயணிகள் தப்பிப்பு

மன்னார், ஒக். 19

இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பேருந்தும் டிப்பர் வாகனமும் நேருக்குநேர் மோதி விபத் துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார். ஏனை யவர்கள் தெய்வாதீனமாகத் தப்பியுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் முள்ளிக்குளம், மன்னார் வீதி யில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

முள்ளிக்குளத்தில் இருந்து மன்னார் நோக்கிப் பயணித் துக் கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துக்குச் சபைக்குச் சொந்தமான பயணிகள் போக்குவரத்துப் பேருந்தும் எதிர்த்திசையில் வந்த டிப்பரும் மோதியதி லேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

காயமடைந்தவர் சிலாவத்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சிலாவத்துறைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ச-213)



சண்டிலிப்பாய், கல்வளை பாரதி முன்பள்ளியில் சிறுவர்தின நிகழ்வுகள் அண் மையில் இடம்பெற்றன. (ச-63)



# விழிப்புணர்வு கருத்துரைகள்

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை 'ப்ரத் யங்கிரா' அறக் கட்டளையினரால் விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் முன்னெடுக்கப்பட்டது.

'வேலியே பயிரை மேய்கின்றது' எனும் தொனிப் பொருளில் மாணவர்களுக்கு வாழ்வுரிமை, போதை ஒழிப்பு, கல்வி உரிமை, இலஞ்ச ஊழல் ஒழித்தல், பாலியல் துஷ்பிரயோகம், நீதி மறுக்கப்படல், உயிர் மாய்ப்புச் சட்டத்தை மீறல், சுற்றுச்சூழல்களைப் பாதுகாத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கருத் துரை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-63)



சங்கானைப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தின் ஆசிரியர் தின விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ம-125)

தொலைபேசி : 021 493 0000 - விளம்பரம் : 021-483 1111 மின்னஞ்சல் : news@uthayan.com advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org